டிஸ்ட்ரிக்ட் ரோடு 14000 கிலோ மீட்டர் தூரம் நாம் பராமரித்து வருகின்றோம். ஓ. டி. ஆர். என்று சொல்லக்கூடிய அதர் டிஸ்டிரிக்ட் ரோடு 19000 கிலோ மீட்டர் தூரம் பராமரிக்கப்பட்டு வருகிறது. ரூரல் ரோட்ஸ்-பஞ்சாயத்து ரோடுகளாக ஏறத்தாழ ஒரு லட்சம் கிலோ மீட்டர் தூரத்திற்குப் பராமரித்து வருகிறோம். மொத்த சாலைகள் நீளமே ஒரு லட்சத்து நாற்பத்தோராயிரம் கிலோ மீட்டர் தூரம்தான்.

Non-sanction of Selection Grade|Special Grade to Teachers in Dindigul Municipal Schools.

* 58 *Q.*—Dr. T. R. JANARTHANAM (on behalf of Thiru **P. R.** Thomas): Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that Selection Grade and Special Grade have not been awarded to many teachers in Dindigul Municipal Schools;

(*b*) if so, the number of teachers affected; and

(*c*) the reasons for the non-sanctioning of such posts?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(இ) மற்றும் (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினா எண்கள் 59 மற்றும் 60 ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(1) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மேதகு ஆளுநரிடமிருந்து 25—2—1984 தேதியிட்ட கீழ்க்கண்ட செய்தி வந்துள்ளது:—

"நான் 13—2—1984 அன்று சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு உரையாற்றியதற்காக தாங்கள் அனுப்பிய நன்றி அறிவிப்புத் தீர்மானத்தினை மனநிறைவுடன் பெற்றுக்கொண்டேன்."